புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது

உ
சிவமயம்

விரோதிஞு(1889) ஆவணிமீ ௨௰௨ ஆரம்பமானது

# இந்துசாதனம்

(Supplement to the Hindu Organ)

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம் | ரூ | 5 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 9 00 |
| இலங்கை இந்தியா | ரூ | 8 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 12 00 |
| தொடுவாய்ப்பகுதி | ரூ | 9 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 13 00 |
| தனிப்பிரதி | சதம் | 05 |

முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."
—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு

| | | |
|---|---|---|
| ,, | ஒரு கலம் | ரூ. 10 00 |
| ,, | அரைக் கலம் | ரூ. 5 50 |
| ,, | காற் கலம் | ரூ. 4 00 |
| ,, | ஒரு அங்குலம் | ரூ. 1 00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி.

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—௪௯ | யாழ்ப்பாணம்:—ஈசுவரஞு ஐப்பசிமீ ௯ ( 1937 அக்டோபர் 25 ) திங்கட்கிழமை | இலக்கம்—௫௧

## தமிழாசிரியர் சமூக முன்னேற்றம்

(இது யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் சென்றமாசம் 25-9-37ல் நடந்த வடமாகாணத் தமிழாசிரிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஸ்ரீமான் வி. வீரசிங்கம் B. A. அவர்கள் நிகழ்த்திய பேருரையின் பொழிப்பு.)

அக்கிராசனர்க்கும் சபையோர்க்கும் வந்தனம்!

எமது அக்கிராசனரவர்கள் இக்கூட்டத்திற் சமுகமளித்த ஆசிரியர் தொகையின் குறைவைக் குறித்துக் கூறினர். ஆனால் இதை ஒரு பெருங் குறையெனப் பாராட்ட நான் விரும்பவில்லை. ஓர் ஆங்கில ஆசிரியசங்கம்கூடுமானால் இத்தொகையில் அரைப்பங்குதானும் சமுகமாயிராது; ஆனால் வித்தியாகர்த்தர் வந்திருக்கின்றார். அல்லது ஆசிரியது வேதனங்களிற் சில மாற்றங்கள் ஏற்படப்போகின்றன என்று ஒரு கூட்டங்கூட்டினால் ஆசிரியர் ஒருவரும் தவறாமல் சமுகமளித்துவிடுவர். ஆனால் வேறு தடைகள் ஏற்பட்டபோதிலும் இங்கு இப்போ அனேக ஆசிரியர் குழுமியிருப்பதைக்காண மனம் மகிழ்ச்சியடைகின்றது. மேலும் இங்கு அக்கிராசனம் வகித்திருக்கும் வித்தியாதரிசி அவர்களின் முன்னுரையும் எனக்கு அதிகம் மகிழ்ச்சியை அளித்தது. ஆசிரியராகிய நீவிர்யாவரும் ஒருங்குசேர்ந்து ஒற்றுமைப்படுவீரானால், ஒருசமயம் உமக்கு நட்டம் விளைக்கக்கூடிய சில அரசாட்சியாரின் தீர்மானங்கள் உண்டுபட்டாலும், அவற்றை நீவிர் எதிர்க்கக் கூடுமென்றார். இவ்வார்த்தைகளை முழுமனத்தோடு உண்மையாகவே கூறினர். இங்ஙனம் வேறு வித்தியாதரிசி ஒருவர் கூறுவர் என்று நான் நினைக்கவில்லை. மற்றும் எமது அக்கிராசனர் பள்ளிக்கூடங்களில் ஒற்றுமை அவசியமென்று வற்புறுத்தினார். பிரதம ஆசிரியரும் மற்றைய ஆசிரியரோடு தாமும் ஓர் ஆசிரியரென நினைக்கவேண்டும். வித்தியாதரிசிமாரும் பிரதம ஆசிரியரும் தம்மையும் ஆசிரியராகவே மதித்து மற்றும் ஆசிரியருக்கு முன்னேற்றத்துக்குரிய உதவிகளைப் புரியவேண்டும். ஆசிரியரும் அவர்களது கற்பனைகளைத் தமது முன்னேற்றத்துக்குரியனவென எண்ணி, அவற்றின்படி ஒழுகவேண்டும். இதுவே அக்கிராசனர் குறிப்பிட்ட ஒற்றுமைவாழ்வுக்கு அடிப்படையானது.

### பண்டைநாள் ஆசிரியர்

இன்று பேசுவதற்கு எடுத்துக்கொண்ட விஷயம் "தமிழாசிரியரின் சமூக முன்னேற்றம்" என்பதே. முதற் பண்டைநாட்களிலிருந்த தமிழாசிரியரின் நிலையை ஆராய்வோம். இற்றைக்கு 60 அல்லது 70 வருடங்களுக்கு முன்னிருந்த ஆசிரியர் தமது கிராமங்களில் உண்மையான தொண்டாற்றுவதில் ஈடுபட்டிருந்தனர். அறிவிலே மேம்பாடுடையவராயிருந்தனர். இலக்கணவிலக்கியம், சோதிடம், சங்கீதம், முதலியவற்றிற் பாண்டித்தியமுடையவராயிருந்தனர். மேலான செறிவை உடையவராய், கிராமங்களுக்கு நற்புத்தி புகட்டும் மந்திரிமாராயுமிருந்தனர். கிராமவாசிகள் தமக்குள் ஏற்படும் வாக்குவாதங்களைத் தீர்ப்பதற்கு ஆசிரியரிடத்தே செல்வார்கள். கலையை வளர்த்தலே இவ்வாசிரியருக்கு இன்பம் விளைத்தது. பிள்ளைகளும் குருவைக் கனம்பண்ணும் காலமாயிருப்பது. அத்தகை மாண்புடைத்தவரே ஆசிரியர். "எழுத்தறிவித்தவன் இறைவனுவன்" ஓர் ஆசிரியன் அக்காலத்தில் இறைவனாகவே மதிக்கப்பட்டனன். அக்கிராசனர் அவர்கள் தமது முன்னுரையில் ஓர் முதிய சிங்களஆசிரியன் எங்ஙனம் சிங்களமக்களாற் கனம் பண்ணப்பட்டனனென்பதை உங்களுக்குக் கூறினர். இப்பொழுதும் சிங்களமக்கள் ஆசிரியரைக் கனம்பண்ணுகிறாரென்பது அவரது கதையின் பொழிப்பு. இவ்விதமரியாதை எம்மிடத்திலும் முற்காலத்திலிருந்தது. இப்பொழுது இல்லை. இதற்குக்காரணம் எமது ஆசிரிய உலகத்தில் பல இழுக்குகள் ஏற்பட்டதே. பிரதானமான காரணம் ஒற்றுமைக்குறைவு. சிங்கள ஆசிரியருக்குள் ஒற்றுமை அதிகம் நிலவுகின்றது. ஆதலால் அவரைச் சிங்களமக்கள் நன்றாய் ஆதரிக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் பெறுகின்ற உயர்ந்த சம்பளவீதங்களும் சிங்கள ஆசிரியரின் நாட்டாண்மையிற் றங்கியிருக்கின்றது. சிங்கள ஆசிரியர் தமது கிராமங்களின் தலைவர்களாகவே விளங்குகின்றார்கள். குருவணக்கமும் சிங்களமாணவருக்குள் இருக்கின்றது.

இப்பொழுது எமது நாட்டிற் சட்டம்பியாரென அழைக்கும் ஆசிரியர் முற்காலத்திற் குருமாராகவே கனம்பண்ணப்பட்டவர்கள். அக்காலத்திற் குரு மாணுக்கனுக்குத் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களாகிய புருஷார்த்தங்களையும் நன்றாய்ப் போதிப்பர். அர்த்தம் என்பது பொருள். அக்காலத்தில் உண்மைப்பொருள் யாதென்று போதித்தனர். தமிழ்க்கல்வியின் நோக்கம் இந்தத் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களைச் செவ்வனே உணர்ந்து அவற்றை அடைதலேயாகும். ஆங்கிலம் தலைகாட்டிய காலந்தொடக்கம் இந்நோக்கங்கள் தலைதடுமாறிவிட்டன. முற்காலத்தில் உழைப்புக்காகப் படித்தவர்களல்லர். ஆங்கிலக்கல்வி உழைப்பை இலக்காக உடைத்தாய்வந்தது. ஒருவனுடைய மாண்பு கலைப்பயிற்சியிலும் நெறியிலும் தங்கியிராது. ஆங்கில முறையால் அம்மாண்பு பணத்திற்றங்கிய காலம் தலைகாட்டியது. வரவே தமிழ்க்கலையின் பேறு குறைந்த வருவாயையுடைத்தாய்த் தமிழாசிரியரின் பெருமை குன்றிவிட்டது. தமிழ்க்கலையுணர்ச்சியும் குன்றிவிட்டது. உழைப்புக்காக ஆங்கிலக்கல்வியை எல்லோரும் கற்கத் தலைப்பட்டனர். ஆனால் உழைப்பும் இப்போ குன்றிவிட்டது. ஆகையாற் பொருளீட்டுவதற்காக ஆங்கிலங் கற்கும்நோக்கத்தை அறவே ஒழித்து, ஆங்கிலத்தை நன்றாய்க்கற்று, அம்மொழியிலுள்ள எமக்குப் பயன்படக்கூடிய முறைகளை உணரும் விஷயமாக மாத்திரம் ஆங்கிலத்தைக் கற்பது நோக்கமாயிருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்துகின்றேன்.

### இக்கால ஆசிரியர் நிலை

இனி இக்கால ஆசிரியரின் நிலையை ஆராய்வோம், இவர் சம்பள உயர்ச்சியினால் மாத்திரம் ஓர்வகைப் பெருமையை அடைகின்றாரன்றி வேறொரு மாண்பையும் பெற்றவரல்லர். சுமார் 60 வருடங்களுக்குமுன் ஓர் ஆசிரியன் 5 ரூபாவீதம் வேதனம் பெற்றதும் சரி இப்போ 25 ரூபா வீதம் எடுக்கிறதும் சரி. இப்போ வேதனங் கூடினதாயிருப்பினும், மாண்பும் கௌரவமும் கூடினதாயிருக்கவில்லை. ஆகையால் நீவிர் உம்மைக் கௌரவமுள்ளவராக்கவேண்டும். நல்ல புருஷத்துவம் (Personality) உள்ள ஆசிரியரின் கற்பனைகளையே மாணுக்கர்கவனம்செலுத்திக் கற்றுக்கொள்வார்கள். இங்கே யான் புருஷத்துவம் என்றது வெளித்தோற்றத்தையல்ல, செறிபடைத்த சீவியத்தாலாகும் ஆன்மவிலாசத்தையே. ஆதலால் நல்ல புருஷத்துவமற்றவருடைய போதனைகள் பயன்படமாட்டா. இடையறு முயற்சியினால் ஆசிரியராகியநீவிர் கண்ணியத்தை வளர்த்து உங்கள் புருஷத்துவத்தைப் பெருக்கிக்கொள்ளாவிடில், நீவிர் செய்யும் தொண்டு பயன்படமாட்டாது.

### திருநள்ளாறு—திருத்தாண்டகம்

குலங் கொடுத்துக் கோணீக்க
வல்லான் றன்னைக்
குலவரையின் மடப்பாவையிடப்
பாலானை
மலங்கெடுத்து மாதீர்த்தமாட்டிக்
கொண்ட மறையவனைப்
பிறைதவழ்செஞ் சடையி
னானைச்
சலங் கெடுத்துத் தயாமூல
தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க் கெல்லா
நலங்கொடுக்கு நம்பியை
நள்ளாற் றானை
நானடியே நினைக்கப்பெற்
றுய்ந்த வாறே.
—அப்பர் சுவாமிகள்

### ஆசிரியர் தொண்டாற்றல்

நீவிர் செய்யக்கூடிய ஓர் விசேஷ தொண்டு யாதெனில், உமது கடமைகளிற் கண்ணுங்கருத்துமாயிருத்தலே. பிள்ளைகளை உமது பாதுகாப்பில் விடுகின்றார்கள். அவர்களுக்குரிய தொண்டுகளைப் புரிந்து நீங்கள் ஒளியையும் உற்சாகத்தையும் கொடுக்கவேண்டும். கற்பிக்கும் முறைகள் பலவற்றை உபயோகப்படுத்துகின்றீர்கள். ஆனால் இம்முறைகள் யாவும் எல்லாப்பிள்ளைகளுக்கும் ஏகமாய் உபயோகப்படா. ஒரு ஆண்டி பிச்சைக்கு வந்தானென்று வைத்துக்கொள்ளுவோம். வந்தவர் யாவர்க்கும் போதிய அரிசியைக் கொடுத்தல் தகாது; நல்ல தேகக்கட்டுள்ளவனாய், உழைக்கக்கூடியவனாயிருந்தால் அவனுக்குப் பொருள் கொடுக்கவேண்டியதில்லை. உண்மையான ஓர் அடியவனாய், அல்லது அங்கக்குறைவுள்ளவனாய், உழைக்கமாட்டாதவனாய் ஒருவன்காணப்பட்டால் அவனுக்கு யாம் செய்கின்ற உதவியே தொண்டெனப்படும். இவ்விதமே மாணவருள்ளும் சிலர் உமது தொண்டினைத் தேவைப்படுவர். சிலருக்கு அதிகம் தேவையில்லை. சிலரைக் கண்டித்துக் கற்பிக்கவேண்டும். சிலருக்குத் தேவையில்லை. சிலருக்கு ஓர் பாடத்தை அதிகம் விளக்கவேண்டும். சிலருக்கு அற்பம் விளக்கினாற் போதுமானது. இவ்விதம் ஆராய்ந்து கற்பிப்பவரே உண்மைத் தொண்டாற்றுபவராவர். மேலும் நீர் உமதுதொண்டுக்கும் தொண்டாற்றவேண்டும்.

தொண்டுக்குத்தொண்டாற்றலென்பது, உமது படிப்பிக்கும் தொழிலுக்கு நீர் தொண்டுபுரிய வேண்டுமென்பதே. படிப்பிக்கும் முறைகளிற் பெரும்பாலும் ஆங்கில முதலிய அன்னிய தேச முறைகளையே அனுசரிக்கின்றீர்கள். உமது மாணுக்கரின் மனோநிலைக்கேற்ப ஏன் நீவிர் இம்முறைகளை மாற்றக்கூடாது? ஏன்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## 'நகைச்சுவை'

[ஆசிரியர் க. சரவணமுத்து நவாலியூர் ]

(முற்றொடர்)

௧. குருகாம், வயிரமாம்.........
கருவாயுலகுக்குமுன்னேதோன்
றுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை
தானே

(திரு. தா)

௨. பூத்தானும்....................
காத்தானுங் காலனடையா
வண்ணம்
கண்ணுங் கருகாவூ ரெந்தை
தானே

(திரு. தா)

௩. பெண்ணான்..............
கண்ணாய் உலகெலாங் காத்தாய்
நீயே

(திரு. தா)

௪. கண்ணவனா யுலகெலாங் காக்கின்
றானை

(திரு. தா)

௫. உண்ணாதுறங்கா............
கண்ணாய் உலகுக்கு நின்றாய்
போற்றி

(திரு. தா)

௬. பெண்ணவனை..............
பாரவனைப் பாரில்வாழும் உயிர்
கட்கெல்லாம்
கண்ணவனை

(திரு. தா)

௭. விண்ணவனை மேருவில்லா
வுடையான் றன்னை
மெய்யாகிப் பொய்யாகி விதியா
னானைப்
பெண்ணவனை யாணவனைப்
பித்தன் றன்னைப்
பிணம்பிடுகாடு டையானைப்
பெருந்தக்கோனை
எண்ணவனை யெண்டிசையுங்
கீழு மேலும்
இருவிசும்பு மிருநிலமுமாகித்
தோன்றும்
கண்ணவனைக் கஞ்சனூராண்ட
கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்
டுய்ந்த தேனே.

(திருத்தாண்டகம்)

(திருக்கஞ்சனூர்)

இரு விசும்பும் இரு நிலமும் ஒரு பெருங் கண்ணாகத் தோன்றிய கடவுள் ஒரு நாள்; சிவம் பழுத்த திருநாவுக்கரசர் முன் 1½க் கண்ணுடனே தோன்றினார், என்று அடிகள், என் புகரைந்த அன்புடன் போற்றும், தெய்வமணங்கமழும் தேவாரம் திருந்திய நகைச்சுவையை, கனியூட்டுகின்றது.

கோவணமுடுத்த பூவணக் கிழவனாரை எழுதுகோல் கொண்டு ஓவியத்தில் யாவரோ எழுதவல்லார் என்று கரையிறந்தகாதலோடு தேவாரம் ஓதும் திருநெறிச் செல்வர், "ஒன்றரைக் கண்ணு" என்று றும் புலனும் செம்புலனாய் மாந்த மண்டிய காதலுடன் மணிவாய்மலர்ந்த தேவாரம், உலப்பிலா உவகையை ஊட்டுகின்றது.

தேவாரம்

கோவண முடுத்த வாறுங்
கோளர வசைத்த வாறும்
தீவணச் சாம்பர் பூசித் திருவுரு
விருந்த வாறும்
பூவணக் கிழவனாரைப் புரியுரி
யரைய னாரை
ஏவணச் சிலையினாரை யாவரே
யெழுது வாரே

(பொது-தனித்திரு நேரிசை)

ஊனுடம்பிற் பிறவி விடந்தீர்ந்து உலகோர் உய்ய உணர்வு முதல் நான்கு திருத்தொண்டினையும் தெய்வமணங் கமழத் திருமந்திரமாய் மலர்வாய் மலர்ந்த நம்பிரான் திருமூலநாயனார், செம்பொருளாய, சிவபெருமான் உலகிற்கு, ஒளிக்குள் ஒளியாய் ஒளிரும், ஒப்பற்ற ஒரு பெருங்கண், என்று சைவசித்தாந்தப் பொருள், துறுத்து உருகிய அன்புடன், அருளிய மந்திரப்பா, மனத்தைக்கவரும் மாண்புடைத்து.

திருமந்திரம்

காணாத கண்ணிற் படலமே
கண்ணொளி
காணாதவர்கட்குங் காணாத
வவ்வொளி
காணாதவர்கட்குங் கண்ணும்
பெருங்கண்ணைக்
காணாது கண்டார் களவொழிந்
தார்களே.

விளக்கைப் பிளந்து விளக்கினை
யேற்றி
விளக்கினுக்குள்ளே விளக்கினைத்
தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல்
லோர்கட்கு
விளக்குடை யான்கழல்
மேவலு மாமே.

எனவே, புல்லோடுங் கல்லோடும் பொன்னோடும் மணியோடும் சொல்லோடும் வேறுபாடிலா நிலைமை அணிந்திருந்த நல்லோராம் வாகீசப் பெருந்தகையார் எல்லா உலகிற்கும் பேரொளியாய பெருங் கண்ணுடைய செம்பொருளை "1½க் கண்ணன்" என்று உள்ளம் பொங்கிய காதலுடன் உயரிய செந்தமிழ்ப் பாவால், கூறும் பகுதி, அன்பெனுந் தேனை அமைதியாய ஊட்டுவதுடன், நிறைந்ததோர் நகைச்சுவையையும், நயந்து நல்குகின்றது.


நின்ற திருத்தாண்டகமும் நீடு தனித்தாண்டகமும், ஐம்புலனும், ஒன்றுபட அகங் குழைய, அமுத வாய் மலர்ந்த அப்பர் திருநாள், கைப்போது, மலர்தூவிக் காதலித்து வணங்குவமே.

—(தொடரும்)

# கேரள சந்தன சோப்

அழகான
மாதர்களுக்கேற்றது,
சருமத்திற்கு
அழகையும்
ஆரோக்கியத்தையும்
அளிக்கவல்லது





எல்லா
இடங்களிலும்
கிடைக்கும்

ஏஜன்ட்ஸ்:—

## தேவார் அன்கோ,

57 மெயின் ஸ்ட்றீட்,
கொழும்பு.

யாழ்ப்பாணத்தில் இது பெறக்கூடிய இடங்கள்
N. M. S. சுல்தான் மோகிதீன் பிரதர்ஸ், பெரியகடை, யாழ்ப்பாணம்
மேடிக்கல்ஹால், பெரியகடை, யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்அப்போதிக்கரீஸ்கம்பனிமெயின்ஸ்ட்ரீட்,யாழ்ப்பாணம்
(Mis 156. 10-9-37—தி



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,367 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விதகி வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12, மாசம் என்றும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறைபே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும். உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக் கொண்டு பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும்) பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கோள்ளலாம்.

சி. செல்லப்பா
மானேஜர்.

Y 225. 21-11-36—20-11-37 (தி)



வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ்
என்றழைக்கப்பட்ட

# மலாயா வங்கி லிமிற்றட்

(தொடுவாய் நாட்டிற் பதிவு செய்யப்பெற்றது)
அனுமதிபெற்றமுதல்:-$20,00,000-00 கட்டப்பட்டமுதல்:-$2,60,200-00
தலைமை ஆபீஸ்:- 2 வொச் அவென்யு, கோலாலம்பூர்
கிளை, ஏஜென்சி ஸ்தாபனங்கள். { யாழ்ப்பாணம், கொழும்பு, மதராஸ், சின்னான், செறம்பான், ஈப்போ.

இவ் வங்கியின் யாழ்ப்பாண ஆபீசில் சகலவித வங்கி முயற்சிகள், பணமாற்றல் 8 வீத வட்டிக்கு நகை இடுபிடித்தல், பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்கட்குக் கப்பற்றுண்டு பெற்றுக்கொடுத்தல், உலகத்திலுள்ள பிரதான பட்டினங்களுக்குப் பணமனுப்புவதற்குத்தகுந்த வசதிகள் முதலியன செய்யப்படும்.

எஸ். பீ. யோசேப்,
மனேஜர், யாழ்ப்பாணம்.

வீ. பீ. நிக்கலஸ்,
மனேஜிங் டிறக்டர்.

(Y 54. 22-6-37—21-6-38.) (தி)


## பூர்வ ஞானமா?

வான்கோழியின் செயல்!

சில தினங்கட்கு முன்னர் ஒரு பௌத்த குரு திருப்பணிக்குக் காசு சேர்க்கும் பொருட்டுக் கெற்றவால முல்லா என்னுமிடத்திற்குப் போயிருந்தார்; அங்கே ஒருவர் வீட்டிலுள்ள வான்கோழியொன்று தோட்டத்தில் மேய்ந்து கொண்டு நின்றது. குறித்த குருவைக் கண்டமாத்திரத்தே அவரிடம் ஓடி வந்ததாம். குரு அது தம்மைக் கொத்தவருகின்றதென எண்ணி ஒதுங்கவும் அக்கோழி அவருடைய அடிகளுக்குக் கிட்டப் போய் மெல்லப் படுத்தது; குரு அவ்வளவில் அதைவிடுத்து மீண்டுவிட்டார்; பின்னரும் சில நாட்செல்ல அவர் அங்கே போனபோது அந்த வான்கோழி அவரைக் கண்டமாத்திரத்தில் அவருடைய காலண்டை ஓடிப்போய் நின்றது. அங்குள்ளவர்களெல்லாரும் இந்த அற்புதத்தைக் கண்டு தங்களுட் பணஞ்சேர்த்து அக்கோழியைச் சொந்தக்காரனிடமிருந்து விலைக்கு வாங்கி அக்குருவிடமே ஒப்பித்துவிட்டார்கள்; இப்பொழுது குரு போகிற இடமெல்லாம் அவ்வான்கோழியும் இவரைத் தொடர்ந்து செல்ல, சனங்கள் ஆச்சரியத்துடன் பார்த்துப் பலவாறு பேசிக்கொள்ளுகிறார்களாம்; "அடுத்த நத்தார்ப்பெருநாளிற் கிறீஸ்தவர் தன்னைக் கொன்று தின்றுவிடக் கூடுமென்ற அச்சத்தினால் இவ்வான் கோழி அக்குருவை அடைக்கலம் புகுந்த"தென்று சிலரும், "இதற்கு ஏதோ பூர்வஞானமிருக்கவேண்டு மென்று" இன்னுஞ் சிலரும் பேசிக் கொள்ளுகிறார்களாம். குரிக்குருவி நாரை யென்னுமிவைகள் பூர்வ ஞானத்தினால் இறைவனை வழிபட்டு உய்தியடைந்தனவெனப் புராணங்கள் கூறுகின்றனவல்லவா!

## ச. வகச்சேரி அரசினர் வைத்தியசாலை

### மருத்துவசாலையுந் திறக்கப்பட்டது

சாவகச்சேரியிலுள்ள அரசினர் வைத்தியசாலையில் கருப்ப ஸ்திரீகளைப் பிரசவ காலத்தில் வைத்துப் பராமரித்தற்காகிய மருத்துவசாலை புதிதாய் அமைத்து, சென்ற வாரம் வடமாகாணத் தலைவரால் திறக்கப்பட்டதாம். இது ஏககாலத்தில் ஆறு பெண்களை வைத்துப் பராமரிக்கக் கூடியதாய், 15000 ரூபா செலவிட்டு அமைக்கப்பட்டிருக்கின்றதாம். வைத்தியசாலை திறக்கப்பட்டவுடனே கருப்ப ஸ்திரீகள் 6 பேர் வந்து சேர்ந்தனராம்; இவர்களுள் 3 பேர் ஆண் குழந்தைகளை யே பிரசவித்துள்ளனராம்.

## குணுப்பிட்டியாத் தொழிற்சாலை வேலை நிறுத்தம்

### எதிரிகள் நிரபராதிகளெனக் காணப்பட்டனர்

கொழும்பிற் கணித்தான குணுப்பிட்டியாத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தொழிற்சாலையதிகாரிகளுடன் மாறுபட்டு வேலை நிறுத்தஞ் செய்தபோது, பரிஸ்ரர் L. குணவர்த்தன, எட்மண்ட் சமரக்கொடி யென்னுமிருவரும் அத்தொழிலாளருக்குத் துணையாக நின்று கலகஞ் செய்ய அவர்களைத் தூண்டிவிட்டதுமல்லாமல், பொலிஸ் அதிகாரிகள் கட்டளைக்கு அடங்க மறுத்தார்களென்று 7 குற்றச் சாட்டிற் கொழும்புப் பொலிஸ் அதிகாரியாகிய மிஸ்ரர் முல்னர் என்பவர் அவர்களைச் சிறைப்படுத்தி அவர்களுக்கு விரோதமாகக் கொழும்புப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள்; நீதிபதி அவ்வழக்கை விசாரணை செய்து அவ்விருவரும்நிரபராதிகளெனக் கண்டு விடுதலை செய்துள்ளார்.


# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

Telephone No. 30.

(Y 65 1-3-37—31-3-38) தி



வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# மயூரகிரி புராணம்

இக்காலத்திற் "குன்றக்குடி"யென வழங்கும் சிறந்த சுப்பிரமணிய தலமாயுள்ள மயூரகிரித் தலபுராணமாகிய இவ் வரிய நூல், வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் எழுதிய சிறந்த பொழிப்புரை, இப்பத்திரிகையின் ஆசிரியராகிய ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை நவமாக எழுதிச் சேர்த்த விசேடவுரை, உரையாசிரியர் வரலாறு, அவருடைய பிரதிமைப்படம் முதலியவைகளுடன் தெளிவாக அச்சிடுவித்து வனப்புறக் கட்டப்பெற்று வெளிவந்துள்ளது.

இப்புராணம் கந்தசஷ்டி விரத புண்ணிய தினங்களில் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவாலயங்கள் திருமடங்களிற் சிரத்தையோடு படனஞ் செய்யப்படுவது. பிரதியொன்றன் விலை ரூபா 1. சதம் 50. (ரூபா 1. அணு 8) 5 பிரதிகளை ஒரே முறையில் வாங்குபவருக்கு ஒருபிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும். எத்தனை பிரதிகட்காயினும் முற்பணமாக அனுப்பி வைப்போருக்கு முத்திரைச்செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும் இவ்வரியபுராணமும் உரையும் இப்பொழுது வெளியிடப்படாவிடின் அருகிவிடுமென அஞ்சியே வெளியிட்டமையின், செந்தமிழ்ச் சைவ அபிமானிகள் ஒவ்வோர் பிரதியையேனும் அபிமானித்து வாங்கிப் படிப்பார்களாக.


*Apply to:* PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai (Jaffna)

(Mis 144



# ஆஸ்ரின் ரென்-போர்

என்னும் காரில் ஓடும் இன்பமே இன்பம்.



ஆஸ்ரின் ரென்னிலுள்ள சிலசிறந்த குறிப்புக்கள்.

| | |
|---|---|
| அளவு கணக்கான அழகிய கோச்வேர்க் வீல்பேஸுக்கிடையில் இருக்கைவசதி. அவசியமற்ற பகுதிகள் ஒன்றும் இல்லை. அவசியமற்ற பாகம் ஒன்றும் இல்லை தேக சௌகரியத்திற்கு ஏற்ற சீற்றுகள் எளிதில் இயங்குதற்காக, என்ஜின் ரப்பரின்மேல் வைக்கப்பட்டிருக்கும்முறை. | ஆகமேலுக்கும் மூன்றாவதாகவும் இரண்டாவதாகவும் சிங்கிரமேஷ் அமைக்கப்பட்டு சத்தமில்லாமலும் மிகச் சுலபமாகவும் மாற்றக்கூடிய கியர். ஸ்பெயர் வீல் வைக்கக் கூடிய லக்கேஜ் கரியர் என்ஜின்குளிரச் செய்தற்குத் தானகவே இயங்கக்கூடிய தேர்மோஸ்ரற்றின் ஒழுங்கு |

ஆகிய இவைகளாம்
விலை ரூபா 3,275

மற்றக்கார்களை நீங்கள் விலை கொடுத்து வாங்குகிறீர்கள்.
ஆனல் ஆஸ்ரின்காரில் செலவிடும்பணமோ பழுதற்ற பணமாகும்.

## உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட் கொழும்பு.

நீங்கள் ஆஸ்டின் காருக்குக் கொடுக்கும் பணம்
பழுதற்ற பணமாகும்

யாழ்ப்பாணத்திற்கும்,

திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னர், அநுராதபுரம் ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜென்ஸ்
ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y 137. 19-8-37.— 18-8-38. (தி)

# ஸைசவ பரிபாலன சபை

## The Saiva Paripalana Sabhai Ordinance Ordinance No. 17 of 1931

### 1931 ம் ஆண்டின் 17 ம் இலக்கச் சட்டம்

### 1931 ம் ஆண்டு ஜூன் மீ 17 உ தேசாதிபதியின் அங்கீகாரம் பெற்றுச் சட்ட பூர்வமானது

மொழிபெயர்ப்பு

#### முன்னுரை

1888-ம் ஆண்டு ஏப்பிரல் மீ 30-ந் திகதி யாழ்ப்பாணத்தில் "சைவ பரிபாலன சபை" யென்னும் பெயருடன் சபையொன்று ஏற்படுத்தப்பட்டு அதன் அங்கத்தவர்கள் சம்மதத்துடன் சபையையும் சபையின் நோக்கங்களையும் செவ்வனே நடத்துவதற்கு வேண்டிய பிரமாணங்களும் ஏற்படுத்தப் பெற்றன.

மேற்படி சபையையும் சபையின் நோக்கங்களையும் இதுகாறும் செவ்வனே நடத்தி வந்து இப்போது தங்கள் சபையைப் பதிவு செய்யும்படி கேட்டிருக்கிறார்கள். அக்கேள்வியை அநுசரிப்பது பொது நன்மையெனத் தெரிகிறது.

ஆகையால் இலங்கைச்சட்ட நிருபண சபையின் அநுமதியுடன் தேசாதிபதியவர்கள் பின்வரும் சட்டத்தை இங்ஙனம் ஏற்படுத்துகிறார்:—

சட்டத்தின் பெயர்

1 இச்சட்டம் -"1931-ம் ஆண்டின் சைவபரிபாலனசபைச்சட்டம்" என்று அழைக்கப்படும்.

சைவபரிபாலன சபையைப் பதிவுசெய்திணைத்தல்

2 இச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் தொடக்கம் அதன்பின் இப்போது இருக்கும் அக்கிராசனர், உப அக்கிராசனர்கள், காரியதரிசி, உப காரியதரிசி, தனாதிகாரி என்னுமிவர்களுடன், நிருவாக சபையின் மற்றைய அங்கத்தவர்களும் சபையின் பொது அங்கத்தவர்களும் இனிமேற் சேரும் அங்கத்தவர்களும் ஒரு சன சமூக சபையாய் "சைவ பரிபாலன சபை" யென்ற பெயருடன் என்றென்றும் இருத்தல் வேண்டும். இச்சபையார் சபையின் பேரில் ஏதும் வியாச்சியம் ஏற்படும்போது நியாயஸ்தலங்களில் மற்றையவர்கள் மீது வழக்குத் தொடரவும் மற்றையவர்களால் தொடரப்படவும் யோக்கியதை யுடையாராவர். அதுவுமல்லாமல் சபைக்குக் குறிப்பிட்ட அடையாளமான ஒரு முத்திரை வைத்திருப்பதற்கு இத்தால் அதிகாரங் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இம் முத்திரையை மாற்றி வேறேதும் முத்திரையைத் தங்கள் விருப்பப்படி வைப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

சபையின் போது நோக்கங்கள்

3 சபை அமைக்கப் பட்டதன் நோக்கங்கள் பின் வருமாறு:—

(a) சைவசமயத்தை வளர்த்தல், பரப்புதல்.

(b) சைவக்கோவில்களை அமைப்பித்தல், பழுதுபார்ப்பித்தல், புதுக்குவித்தல்; தமது அதிகாரத்தினதும் மேற்பார்வையினதும் கீழ் வரும் அப்படிப் பட்ட கோவில்களை நிர்வகித்து நடத்துதல்.

(c) சைவ மடங்களையும் அவைக்குச் சேர்ந்த பொருள்களையும் ஆதனங்களையும் பொறுப்பெடுத்து நடப்பித்தல், ஒவ்வொரு மடமும் எந் நோக்கத்துடன் ஏற்படுத்தப் பட்டதோ அந் நோக்கத்தைப் பூர்த்தியாக்குதற்கே அதன் பொருளையும் வரும்படிகளையுஞ் சேரச் செய்தல்.

(d) சைவப் பள்ளிக் கூடங்களைத் தாபித்தல், தாபரித்தல், நடத்துதல், சைவக்கல்வி வளர்ச்சிக்கான பாடபுத்தகங்களையும் ஏனைய புத்தகங்களையும் அச்சிட்டு வெளியிடுதல்.

(e) சைவமக்களின் உரிமைகளைக் காப்பதற்காகிய பத்திரிகைகளைப் பிரசுரித்தல், அவைகளுக்குப் பணஉதவி செய்தல், தாபரித்து நடத்துதல். இந் நோக்கங்கள் நடந்தேறும் வண்ணம் தேவையான பல முயற்சிகளைச் செய்தல்.

(f) மயானங்களையும் வைத்திய சாலைகளையும் அமைத்தல், தாபரித்தல் நடப்பித்தல்; இன்னும் சபையாரிடம் ஒப்புவிக்கப்படும் இவைபோன்ற ஸ்தாபனங்களை ஏற்று நிர்வகித்து நடத்துதல்.

(g) தமிழ்க் கல்வியையும், பல கலைக் ஞானங்களையும், நாடகங்களையும் ஆதரித்தல், வளரச் செய்தல்.

நிருவாக சபை

4 (a) சபையின் கருமங்களெல்லாம், 2-ம் அட்டவணையிற் சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கேற்ப, ஒரு நிருவாகசபையால் நடத்தப் படல் வேண்டும். அந்த நிருவாகசபையில் ஒரு அக்கிராசனரும், உப அக்கிராசனர்களும், காரியதரிசியும், உபகாரியதரிசியும், தனாதிகாரியும் இன்னும் 15 பேருக்குக் குறையாமல் 20 பேருக்கு மேற்படாமல் அங்கத்தவர்களும் இருத்தல் வேண்டும். இந்த நிருவாகசபையினர் சபையின் அவ்வக் காலத்தின் பிரமாணங்களின்படி தெரிவு செய்யப் பட்டவர்களா பிருத்தல் வேண்டும்.

(b) சபையின் அங்கத்தவர்களெல்லாரும் மேற்படி சபையின் அவ்வக்காலத்திலிருக்கும் பிரமாணங்களுக்குக் கட்டுப் பட்டவர்களா யிருத்தல் வேண்டும்.

(c) முதலாம் அட்டவணையிற் குறிப்பிட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சபையே, சபையின் முதலாம் நிருவாக சபையாயிருத்தல் வேண்டும். இந்த நிருவாகசபையின் பின் தோன்றலாய் வரும் நிருவாக சபைகளின் அங்கத்தவர்கள் இரண்டாம் அட்டவணையிற் சொல்லிய பிரமாணங்களின்படி தெரிவு செய்யப் பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

பிரமாணங்களை ஏற்படுத்துதற்கு அதிகாரம்

5 நிருவாக சபையார் காலத்துக்குக் காலம், தங்கள் அங்கத்தவரிற் கூடிய தொகையினரின் தீர்மானத்தின்படி, சபை அங்கத்தவரைச் சேர்ப்பதற்கோ, அங்கத்துவத்திலிருந்து விலக்குதற்கோ நிருவாகசபையும் அதன் உத்தியோகஸ்தரும் அதிகாரிகளும் தொழிலாளரும் செய்ய வேண்டிய அல்லது பார்க்கவேண்டிய கடமைகளைப்பற்றியும், சபையின் அல்லது மற்றைய கடமைகளையும் தொழில்களையும் நடப்பிக்கும் முறைகளைப் பற்றியும், பொதுவாகச் சபையின் காரியங்களையும் சபையின் நோக்கங்களையும் செய்து முடிப்பதற்கும் பிரமாணங்களுண்டுபண்ணுவதற்கோ அதிகாரமுடையாராவர். அப்படி உண்டு பண்ணப்பட்ட பிரமாணங்களை மாற்றவோ, அவற்றுடன் வேறும் பிரமாணங்களைச் சேர்க்கவோ, திருத்தவோ, அவற்றைத் தவிர்க்கவோ பின் சொல்லப் படும் 7 ம் உபவிதிக்கமைய நிர்வாக சபையினர்க்கு அதிகாரம் உண்டு.

அட்டவணையின் பிரமாணங்கள் சபையினதே

6 இதற்கு முந்திய பிரிவிற்கு அமைய, அட்டவணையிலிருக்கும் பிரமாணங்களே எல்லா விவகாரங்களுக்கும் சபையின் பிரமாணங்களாகும். ஆனால் இதிலிருந்து இப்பிரிவின்கீழ் சபை எக்காலத்திலும் புதுப் பிரமாணங்கள் உண்டுபண்ண முடியாதென்றும், இப்போது இருக்கும் பிரமாணங்களைத் திருத்தவும் மாற்றவும், கூட்டவும் குறைக்கவும் இயலாதென்றும் எண்ண வேண்டியதில்லை.

—(தொடரும்)

### தமிழாசிரியர் சமூக முன்னேற்றம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

யாழ்ப்பாண முறைகளைக் கைக்கொண்டு தமிழுக்குத் தொண்டு செய்தலாகாது? மனோசாத்திர முறைகளைக் கையாண்டு பிள்ளைகளைத் திருத்தவேண்டும். இவர்களுடைய நிலைக்கேற்ற புஸ்தகங்களையும் நீவிரே இயற்றவேண்டும்.

கல்விச்சாலைகளில் உமது தொண்டு இப்படியிருக்கப் புறத்தேயும் நீங்கள் தொண்டாற்றவேண்டியவரா யிருக்கின்றீர்கள். "மலேறியா" நோயைக் குறித்து ஓர் பாடம் படிப்பிக்கின்றீர்களென வைத்துக் கொள்ளுவோம். வித்தியாதரிசி சோதிக்கவருங்காலத்தில் பிள்ளைகள் நன்றாய் விடைகூறிச் சித்தியடைகின்றார்கள். ஆனால் அப்பிள்ளைகளுடைய வீட்டுப் படுக்கைகளைச் சூழ்ந்து "மலேறியாக்"கொசு நிறைந்திருக்கும். இப்படியாயிருந்தால் பிள்ளைகள் "மலேறியா",க் காய்ச்சலைக் குறித்துப் பாடங் கற்பதில் என்ன பயன்? ஆகையால் அவர்கள் கற்கும் பாடங் பாடங்களால் தமது வீடுகளையும் சுத்திகரிக்கக்கூடிய அத்தகைய விதமாகவே நீவிர் கற்பிக்கவேண்டும். பெற்றோர் சங்கங்களைக் கூட்டிப் பிள்ளைகளின் குறைநிறைகளை அவர்களுக்கு நன்றாய்ப் போதிக்கவேண்டும், பெற்றோரை நீங்கள் இடையிடையே சந்திக்கவும் வேண்டும். சுகாதார முறைகளை அவருக்கும் கற்பிக்க வேண்டும். இவ்விதமாய்க் கிராமங்களிலுள்ள பல குறைகளையும் அவருக்கு எடுத்துக்காட்டிக் கிராமங்களையே முன்னேற்றமடையச் செய்துவிடுவீர்கள். அப்பொழுதே கிராமங்களுக்கு ஒளியைப் பரப்புங் கருவிகளாய் நீங்கள் விளங்குவீர்கள்.

### இலங்கையில் ஆக்கப்படும் "றபர்ப்" பொருள்கள்

கொழும்பிலுள்ள சதம் தெருவிலுள்ள ஒருபொருட்காட்சிச்சாலையில் றபரினால் ஆக்கப்பட்ட மேசைப்பாய், குழல்கள், பென்சிலெழுத்தையழித்தற்கான றபர் எழுத்தழிகருவி முதலிய பல பொருள்கள் இலங்கையிற்றானே ஆக்கப்பட்டு விற்றற்பொருட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. பலர் இவைகளை அபிமானித்து வாங்குகிறார்களாம்.

### பாங்க்ஸ் - ஜயத்திலகா பிணக்கு

### தேசாதிபதியோடு இரண்டரைமணி நேரம் மந்திரிகளின் சம்பாஷணை

முதல்தடவையாகச் சென்ற வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மந்திரிகள் தேசாதிபதியைத் தேசாதிபதி மாளிகையிற் பேட்டிகண்டு பேசினார்கள். பலவிஷயங்களுடன் பிரேஸ்கேடில் விஷயத்தில் திரு. பாங்க்ஸ் சம்பந்தமாகவும் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரும் அச்சமயம் அங்கு பிரசன்னமாகவில்லை. இரண்டரைமணி நேரம் மந்திரிகளும் தேசாதிபதியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு பத்திரிகை நிருபர் உள்நாட்டு மந்திரி ஸேர். பரன் ஜெயதிலகாவைக் கண்டுபேசியபொழுது அவர் கூறியதாவது:—

"தேசாதிபதியுடன் பேசிக்கொண்டதை வெளியே பிரஸ்தாபிப்பது ஒரு மந்திரிக்கு முறையானதல்ல; நேற்று மாலைப்பத்திரிகை ஒன்றில் நேற்றுக்காலை தேசாதிபதியுடன் மந்திரி நிகழ்த்திய சொற்பொழிவின் விபரமொன்று பிரசுரிக்கப்பட்டிருப்பதைப்பற்றிக் கேட்டபொழுது ஸேர். பரன் ஜெயத்திலக அப்பத்திரிகையில் கூறியபடி நான் ஒருவித சொற்பொழிவும் நிகழ்த்தவில்லை. என்னாற் கூறப்பட்டதாகப் பிரசுரிக்கப்பட்ட சொற்பொழிவு ஜூலை 13 ல் நான் அரசாங்கசபையிற் பேசினதையே திருத்திஅமைத்து அப்பத்திரிகையிற் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது" என்று கூறினார்.

### "இந்துசாதனம்" சொல்லாக்கப் போட்டி இலக்கம் 3

உரொக்கப்பரிசு ரூபா 25—00

1-ம் பரிசு ரூபா 15—00 2-ம் பரிசு ரூபா 10—00

சொல்லாக்கப்போட்டி இல. 3.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தீ | 2 பா | 3 வ | லி | | 4 சு | 5 | | 6 த | 7 ம் |
| 8 வ | ச | | 9 த | | | | | | ன |
| | | தி | | | 10 ச | | 11 பு | ப் | |
| | ம் | | | | த் | | | பை | |
| | | | ய | 12 | | ரோ | ன் | | |
| | 13 வ | | ம் | ங் | ய | | 14 ச | 15 ர | ப |
| 16 பு | | ல் | | தா | | | | ண | |
| | 17 தி | | 18 | | ன் | | 19 | ம் | 20 |
| | | 21 | | ம் | | 22 ப | | | |
| ன் | 23 | ய | ன் | | 24 | ளா | | | சை |

கூப்பன் இல............ ...   முடிவு தேதி 5-11-37.

நான், போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதும் ஞாயமானதும் என்று ஒப்புக்கொள்ளுகிறேன்.

பெயர்........................................................

விலாசம்........................................................

... ........................................................

### போட்டிக் குறிப்புக்கள்

**இடமிருந்து வலம்**

1. இந்துக்கள் இப்பண்டிகையை எதிர் பார்க்கின்றனர்.
4. இது இல்லா மக்களின் வாழ்க்கை பாழ்.
8. பொதியமலையிலிருந்தே இது பிறக்கின்றதென்று இலக்கியங்கள் வர்ணித்துக் கூறுகின்றன.
11. இதைச் சரிப்படுத்தினாலும் பிழையே பிழை.
12. இவனுடைய பவனி உண்மையானதல்ல.
16. பெயரளவில் சிறிதுதான் ஆயினும் இதன் தீங்கோ பெரிது.
17. இவனுடன் எதிர்க்கப் பலரும் பின்னிடுவர்.
19. இது செய்பவர்களுடன் சிநேகித்தல் ஆபத்துக்கிடமாகும்.
21. இன்பதுன்பம் வரும்போது இது மாறுதலடையும்.
22. நோயாளி விதியாளியானால் "——" போராளிதான்.
23. இவன் தனது தொழிலை நிறுத்துவானாயின் உலகமே அழிந்துவிடும்.
21. வெற்றிலை மென்று உமிழும் பாத்திரம்.

**மேலிருந்து கீழ்**

1. இராக்காலங்களில் அதிகமாகக் கோயில்களில் உபயோகிப்பர்.
2. உணவருந்துவதற்கு இது இன்றியமையாதது.
3. இவர்கள் தம் நாநலத்தினுல் பொருளீட்டிக்கொள்வர்.
5. இதற்கும் பாஷை கற்பிக்கலாம்.
6. அரிச்சந்திரன் மகன் "——"க் காகச் சென்ற அன்றே உயிர் துறந்தான்.
7. தலைகீழான இச் செய்கையை நமது 6ம் ஜோர்ஜ் அரசரும் செய்துவிட்டார்.
9. துறவிகள் இதையும் வெறுப்பார்கள்.
10. இவனின் மனைவி அரும்விரதமிருந்து இவனைப் பெற்றாள்.
12, வருடத்தின் அல்லது சிவியகாலத்தின் மூன்றிலொன்று.
13. இது கிடைத்தால் மெலியவனும் விடான்.
14. உயிரிருந்தாலும் இது மூளைக்காதாம்.
15. கருவி கழண்டிருக்கிறது.
16. சிறந்த அறிவாளிதானிவன்.
18. முதலில்லா வியாபாரி.
20. உலக அதிசயங்களுள் இதுவுமொன்றாக அமைந்தது இதன் பருமையால்தான்.
21. கொம்பில்லாத உனக்கு வாலேன்? வெட்டிவிடு.

### இப் போட்டி நிபந்தனைகள்

1. இப் போட்டியில், ஒவ்வொரு கூப்பனுக்கும் பிரவேசக்கட்டணம் சதம் 25. ஒருவர் இரண்டு கூப்பன்கள் அனுப்பினால், மேலதிகமாக ஒரு கூப்பன் கட்டணமின்றி அனுப்பலாம். பிரவேசக் கட்டணத்தை "மணி ஓடர் அல்லது போஸ்ட்லோடர்" மூலம் மனேஜர், "இந்துசாதனம்" வண்ணார்பண்ணை என்று விலாசமிட்டு கூப்பன்களுடன் அனுப்பவேண்டும். அல்லது இந்துசாதனக் காரியாலயத்தில் நேர்முகமாகப் பணங்கட்டி, பற்றுச்சீட்டுடன் கூப்பன்களை அனுப்பவேண்டும். ஒரு கூப்பன் மாத்திரம் அனுப்புபவர் தம் கட்டணத்தை 2, 3, 6 சத முத்திரைகளாகவும் முத்திரைகள் ஒன்றோடொன்று ஒட்டுப்படாவண்ணம் செய்து அனுப்பவேண்டும்.
2. போட்டி ஆசிரியரின் எழுத்திற்கெழுத்துச் சரியான விடைக்கு 1-ம் பரிசும், அடுத்தபடி சரியான விடைக்கு 2-ம் பரிசும் அளிக்கப்படும். ஒன்றிற்குமேல் சரியானவிடைகள் வந்தால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும் ஒருவரும் சரியானவிடை அனுப்பாவிட்டால், கூடியவரை சரியான விடைகள் அனுப்புபவருக்குப் பரிசு கொடுக்கப்படும். இப் போட்டியில் வெற்றிபெறும் ஒருவருக்கு ஒரு பரிசு மாத்திரம் அளிக்கப்படும்.
3. இந்துசாதனக் காரியாலயத்தில் கடமை புரிபவர்கள் இப்போட்டியிற் கலந்து கொள்ளக்கூடாது.
4. இப்போட்டிக்கானவிடைகளை இம்மாதம் 18ம், 25ம், திகதிகளில் வெளியாகும் அச்சுக்கூப்பன்களிற்றான் எழுதி அனுப்பவேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்புகிறவர்கள் வரிசைக்கிரமமாக இலக்கமிடவேண்டும்.
5. ஓர் கோட்டுள் ஒரு எழுத்துமாத்திரம் எழுதவேண்டும்; எழுத்துக்கள் எல்லாம் மையினாலேயே தெளிவாக எழுதவேண்டும். அழித்தும், திருத்தியும், எழுதிய எழுத்துக்களுள்ள கூப்பன்கள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா.
6. போட்டி ஆசிரியரின் விடை "யாழ்ப்பாணம் ஐக்கியபாங்கியில்" முத்திரையிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.
7. இக்கப்போட்டியின் விடைகள் யாவும் 5-11-37 வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்குமுன் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.
8. இந்தப் போட்டி சம்பந்தமாக ஆசிரியர்களின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும்.
9. விடைகள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

போட்டி ஆசிரியர்,
"சொல்லாக்கப்போட்டி" இல. 3
C/o மானேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

# Nethrananda Thailava

## Ceylon's Premier Curative Medicine Oil

# நேத்திரானந்ததைலம்

## இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவே முதல்தரம்

### 6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50
### தபாற் கூலி 45 சதம்

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஜர்தூ கிலேதத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதை படர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பனவகளையும் போக்கி, தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையுங் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணுடிபோடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயதுவித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகிய பெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் ஏனைய போலித் தைலங்களைப் போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்து கொள்வதும், மாதர் அதிகமாகவிரும்புவதும் 35 வருடங்களாக எவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்,

## இந்த நேத்திரானந்த தைலமே

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்டபெயர் உண்டு என்று வளர்ந்திருக்கிற ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதஞ் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்திற் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல. இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப் பட்டுள்ளது.

### ஓர் உலக அதிசயம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 4 ந் திகதி எழுதிய கடிதத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. T. C. செல்லையாபிள்ளை பின்வருமாறு எழுதுகின்றார்:- "உங்கள் நேத்திரானந்த தைலம் அற்புதமான பலனைத் தருகின்றது. தற்போது விலைப்படுந் தைலங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்ததென்பது அங்கீகரிக்கப்பட்டதொன்று" 12-6-37 இல் சுன்னுகத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகசுவாமி பின்வருமாறு எழுதியுள்ளார்:- "உலகப் பிரசித்தி பெற்ற உங்கள் நேத்திரானந்த தைலம் எனக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறது" போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்றன்விலை ரூபா 2-50 வேத முதலியார் - பாணந்துறை

### நேத்திரநோய்களுக் கிதினும்சிறந்தது வேறுகிடையாது

ஹேலியலாவிலுள்ள டின்ஸ்லண்ட் தோட்டச் சுப்பிரிண்டெண்ட் மிஸ்டர் G. ஹேபேட்ஸ் எழுதுவதாவது:-

"சிலகாலமாக நான் உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தை உபயோகித்தேன். தலைக்கு அது மிகச் சிறந்த எண்ணெயாகும். உங்கள் தைலத்தால் நான் மிகப் பெரிய நன்மையை அடைந்துள்ளேன். போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா 2-50 வி. பி. மூலம் அனுப்புவதாயின் ரூபா. 2-95.

### கண் தொந்தரவு தீர்க்கமாக மாறியது

மாத்தளை, 'அபயக்கோன் வளவை'ச் சேர்ந்த திரு. C. D. F. அபயக்கோன் பின்வருமாறு எழுதுகின்றார்:-

அதிகமாக வாசித்ததால் எனக்கு ஏற்பட்டிருந்த கண்தொந்தரவை உங்கள் நேத்திரானந்த தைலம் தீர்க்கமாக மாற்றியது. நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் மிக அதிகமான பலனை அது அளித்தது." ஆறு அவுன்ஸ் நிறையுள்ள போத்தல் ஒன்றின் விலை ரூபா 2-50. W. டேனியல் பெர்ணுண்டோ வைத்திய சேகர, வேத முதலியார், பாணந்துறை, B. T. S. தலைமைக்காரியாலயம், நொறிஸ் றேட், கொழும்பு; காஸில் ஹோட்டல், கண்டி.

### நேத்திரானந்த தைலம்

இலங்கையின் முதலாவது நோய் தீர்க்கும் மருத்துவ எண்ணெய்

பெண்களால்விரும்பிவாங்கப்படுவது ஆண்களால் நிச்சயமாகத் தேர்ந் தெடுபடுவது

பரம்பரைத் தலையிடி நோய்க்கும் ஜலதோஷம் அல்லது கபத்துக்கும் பல்வேறு நேத்திர நோய்களுக்கும் விசேஷமானது.

கேளாமலிருக்கவே அனுப்பப்பெற்ற தாராதரப் பத்திரங்கள்

திரு. P. S. இளையதம்பி, கலுப்பஹால தோட்டம், எழுதுவதாவது:- "உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தின் பலன் மிகச் சிறந்தது என்று மிகச் சந்தோஷத்தோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்."

திரு. M. L. ஜயசிங்க, எல்டெப் தோட்டம், எழுதுவதாவது:- மிக உக்கிரமான தலையிடி ஏற்பட்டபோது உங்கள் தைலத்தை உபயோகித்தேன். நான் அடைந்த அற்புதமான சுகத்திற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதனை எனது நண்பரொருவர்க்கும் சிபார்சு செய்தேன். அவரது தலையிலும் கண்ணிலும் ஏற்பட்டிருந்த நோய்களை அது நீக்கிற்று."

திரு. K. A. D. அமரசேகரா, ஏ—ன் சொல்லுவதாவது:- "நான்கு போத்தல்களை உபயோகித்தபின், நான் புத்தம் புதிய மனிதனைப் போலக் காணப்படுகின்றேன். இரவில் நல்ல நித்திரை வருகின்றது. தேகத்தைப் பொதுவாக நன்கு தயாரிக்கின்றது. ஆயின் இதை உபயோகிப்பதற்கு முன்னரோ அதிகாலை 2 அல்லது மூன்று மணிக்குமுன் நான் நித்திரை பெறுவதே அர்ப்பலமாயிருந்தது."

திரு. P. E. பெர்ணுண்டோ, வியங்கவெலாத் தோட்டம்:- "தலை, நாசி, காது சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது மிகச் சிறந்த தைலமாகும்"

திரு. எம். வ. செல்லையா, ஆசிரியர் மானிப்பாய்:- "தலை கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது தக்க பலனை யளிக்க நான் கண்டேன்."

மிஸ். B பர்ச், பொலிஸ் பங்களா, வரக்கப் பொலா:- "உங்கள் எண்ணெய் ஒரு பெரியவரமாகும். அது இல்லாமல் இருக்க முடியாது." போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா. 2-50 W. டேனியல் பெர்ணுண்டோ வைத்தியசேகர, வேதமுதலியார் பாணந்துறை,பௌத்தமந்திரய,நொறிஸ்றேட்,கொழும்பு; காஸில்ஹோட்டல்,கண்டி.

### நேத்திரானந்த தைலத்தின் மூலம் தமது வேலையைக் காப்பாற்றிக் கொண்ட கனவான்

சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பெற்ற தாராதரப் பத்திரம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ, பினங்கில் நடைபெறும் "மலாயாட் ரிபியூனல்" என்னும் பத்திரிகையில் ஆசிரியர் குழாத்தில் ஒருவராகக் கடமை பார்க்கும் திரு. T. நோப் எழுதுவதாவது:- சமீபத்தில் இலங்கையிலுள்ள எனது நண்பரொருவர் உங்கள் நேத்திரானந்த தைலத்தில் ஒரு போத்தலை எனக்கு அனுப்பி வைத்தார். சில காலமாக நான் கண்ணிலுள்ள நோயினுல் நான் பெரிதும் வருந்தினேன். இதனுல் எனது பத்திரிகை வேலையை விட்டுவிடும்படி கூறிச் சில கண் வைத்திய நிபுணர்கள் தெரிவித்தார்கள் ...... உங்கள் முதற் போத்தலே எனக்கு நன்மை விளைத்திருக்கின்றது என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதில் இன்னுஞ் சில போத்தல்கள் வேண்டும்......தயவு செய்து C. O. D. போஸ்ற்மூலம் இன்னும் இரண்டு போத்தல்கள் அனுப்பி வையுங்கள்." வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்:- வேத முதலியார் W. டேனியல் பெர்ணுண்டோ வைத்திய சேகரா. "ஸ்ரீவேதவளவு" பாணந்துறை, நொறிஸ்றேட், புறக்கோட்டை

| தலைமை ஸ்தானம்: | கிளைஸ்தானம்: |
|---|---|
| வைத்தியசேகர முதலியார், | பௌத்த மந்திர வைத்தியசாலை |
| டப்ளியு. டானியல் பெர்ணுண்டோ, | நோரிஸ் றேட், கொழும்பு-இலங்கை |
| ஸ்ரீ வேதவளவும், பாணந்துறை. | காஸில் ஹோட்டல், கண்டி. |

தந்தி விலாசம்:- வேதமுதலியார், பாணந்துறை

Y 70.1-7-7-37 to 30-6-38


## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில்கோவிற்பற்று இணுவில் இறை தப்பளாவத்தை என்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் "பராபரசேகரப்" பிள்ளையார்கோவிலுக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 3824ம் இலக்க வழக்கில் 1935ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ந் திகதியைக்கொண்ட தீர்வையின் பிரகாரம் அக்கோவிலுக்குச் சொல்லப்பட்ட தீர்வையின்படி ஓர் அதிகாரியை அல்லது மனேஜரை நியமனஞ்செய்ய வேண்டியிருப்பதால் ஈஸ்வரவருஷ ஐப்பசிமீ 21ந் திகதி சனிக்கிழமை (6-11-37) பிற்பகல் 2மணிக்கு அக்கோவில் மண்டபத்தில் ஓர் பகிரங்கக் கூட்டம் கூடப்படும். அத்தருணம் அவ்வாலயத்தில் வணக்கஞ்செய்பவர்கள் (Members of Congregation) யாபேரையும் தயவுசெய்து சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்

வணக்கஞ்செய்வோர்கள்

Members of Congregation

1 வைத்தியலிங்கம் சங்கரப்பிள்ளை 2 முருகேசு வயிரமுத்து. 3 இளையதம்பி ஆறுமுகர். 4 சுவாமிநாதர் நாகர், 5 ஆறுமுகம் சின்னையா, 6 மார்க்கண்டு செல்லையா, 7 சுப்பிரமணியம் செல்லையா, 8 சின்னத்தம்பி கதிர்காமு, 9 நாகர் சுவாமிநாதர், 10 சரவணமுத்து தம்பையா, 11 ஆறுமுகம் சின்னத்தம்பி

இணுவில், 13-10-37.

(Mis 142 18-10-37 to 25-10-37

---

அன்போடியைந்த வழக்
கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த
தொடர்பு

---


## சாலாமிஸ்திரி லேகியம்

:o:

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா. பிதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை நாகப்பூ, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயக்காந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவுபிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய நாடு வாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனுல் முன் மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,

க ஆறுமுகம்பிள்ளை.

ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதா வைத்தியசாலை.

வீட்டு இலக்கம் 33

பழைய வாடி றேட்டு

கோட்டைமுனை

மட்டக்களப்பு, சிலோன்.

(Y 64. 1-1-37 to 31-12-37.)


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் வல்வெட்டித்துறை மு. சானகி அம்மாள் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1935ம் ஆண்டு 2ம் மாசம்

| நம். | ரூ. | ந. | பெயர். ஊர். நகையின்விபரம். |
|---|---|---|---|
| 20 | 5 | 10 | வே வள்ளிப்பிள்ளை வல்வெட்டி வெள்ளிக்காப்பு சோடி 1 |
| | | | 5ம் மாசம் |
| 64 | 11 | 15 | அ வள்ளிப்பிள்ளை வல்வெட்டித்துறை புறேச்சு 1 |
| | | | 1936ம் ஆண்டு 6ம் மாசம் |
| 118 | 22 | 5 | இ வயித்திலிங்கம் ஊரிக்காடு தாலி 1 |
| | | | 7ம் மாசம் |
| 125 | 1 | 15 | த சங்கரி சமரபாகு அட்சரக்கூடு 1 |
| 131 | 13 | 10 | சின்னன் வள்ளி உடுப்பிட்டி துவளைக்கடுக்கன் சோடி 1 |
| | | | 8ம் மாசம் |
| 148 | 7 | 15 | சி வள்ளி வல்வெட்டி அட்சரக்கூடு 1 |
| 13 | 17 | 30 | M கனகசபை நவிண்டில் பென்ரன் 1 |
| 27 | 29 | 7 | சி சின்னக்கண்டு வல்லுவெட்டி வாளி சோடி 1 |
| | | | 10ம் மாசம் |
| 1 | 5 | 124 | சி சிவசாமி கம்பாழலை கொலுசுக்காப்பு சோடி 1 |
| 3 | 5 | 13 | சி சின்னக்கண்டு வல்லுவெட்டி வாளிசோடி 1 ஒத்தைக்கல் தோடு 1 |

விற்பனவு ஈசுவர வருஷம் ஐப்பசிமாசம் 21ந் திகதிக்குச்சரியான (6-11-37) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியார் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வ. மு. கந்தசாமி,

18-10-37. வேந்திஸ்மேஸ்தர், வல்வெட்டித்துறை.

(Mis. 149. 21 & 25-10-37.)

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893 ம் ஆண்டின் 8 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் அரு. ப. சே. கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1936ம் ஆண்டு ஏப்பிரல் மாசம்

| நம். | ரூ. | ந. ச. | ஊர். பெயர். நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 33 | 4 | 7 50 | பறங்கித்தெரு ஆப்பிரகாம் யோசேப் பொன் செடிவேலை செய்தது 1 |
| 136 | 16 | 12 | மாகியப்பிட்டி சண்முகம் நல்லதம்பி பொன் இமி சில கல் இல்லாத கவுத்தோர் 1 |
| 140 | 16 | 16 | நவாலி கந்தர் சபாபதி பொன் பஞ்சாயுதம் 1 |
| 217 | 25 | 200 | வட்டுக்கோட்டை வயிரமுத்து அருணுசலம் பொன் துண்டு இரண்டு கோர்த்த முருச்சுக்குத்தி தோடி 1 |
| | | | மே மாசம் |
| 302 | 7 | 13 | சொக்குவில் காராளபிள்ளை செல்லத்துரை பொன் திருகில்லாத இமி கல் தோடு சோடி 1 |
| 303 | 7 | 8 | பறங்கித்தெரு மனுேர்பிள்ளை சின்னத்துரை பொன் இமி சில கல் இல்லாத பெண்டன் 1 |
| 346 | 11 | 10 | நல்லூர் சின்னையா விசுவலிங்கம் பொன் இமி கல் சில முத்து டிம்மியில்லாத பதக்கம் 1 |
| | | | யூன் மாசம் |
| 665 | 17 | 14 | அச்செழு கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் பொன் விலாசம் போட்ட ஆடித்தன் மோதிரம் 1 |
| 669 | 18 | 30 | சோனகதெரு முன்னுமுகம்மது முகம்மது பொன் இமி ஒருகல் நெளிக்காப்பு சோடி 1 |
| 670 | 18 | 40 | பெருமாள்கோவிலடி பொன்னம்பலம் தம்பிஐயா பொன் நெளிந்த பூக்காப்பு சோடி 1 |
| 682 | 21 | 40 | ஓட்டுமடம் கந்தையா நமசிவாயம் பொன் டைமன் வெட்டுக் காப்பு சோடி 1 |
| 696 | 22 | 25 | நல்லூர் செட்டித்தெரு சின்னையா விசுவலிங்கம் பொன் முகப்பில்லாத துண்டுச் சங்கிலி 1 |
| 758 | 30 | 17 | வண்கிழக்கு கார்த்திகேசு செட்டியார் முத்துக்குமாரு பொன் காதுகட்டிய கோட்டை அரைப்பவுன் 2 |
| | | | யூலை மாசம் |
| 844 | 10 | 8 | கந்தர்மடம் விசுவலிங்கம் சுந்தரம்பிள்ளை பொன் நெளிந்த இமி கல் புறேச் 1 |
| 901 | 16 | 10 | தட்டாதெரு செல்லத்துரை துரையப்பா பொன் இமி கல் வெள்ளித் திருகுவைத்த கொண்டைப்பூ 1 |
| 956 | 23 | 40 | வண்கிழக்கு வேலுப்பிள்ளை வல்லிபுரம் பொன் கெடியாரம் கோர்க்கிற கைச்சங்கிலி 1 வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 986 | 27 | 8 | கொண்டாவில் முத்து முத்ததம்பி பொன் வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| | | | ஆகஸ்டு மாசம் |
| 1033 | 1 | 7 50 | நல்லூர் இளையவி சண்முகம் பொன் இமிகல் ஒரு கல்இல்லாத அச்சரக்கூடு 1 |
| 1109 | 11 | 16 | சங்கானை சுப்பர் கந்தையா பொன் இமி கல் புறேச் 1 |
| 1181 | 19 | 12 50 | அத்தியடி மாணிக்கம் பொன்னம்பலம் பொன் சுரையாணி இமி கல் சில முத்தில்லாத பதக்கம் 1 |
| 1190 | 19 | 18 | வண்கிழக்கு வைத்திலிங்கம் தம்பிஐயா பொன் இமி கல் தோடு சோடி 1 |
| 1271 | 30 | 83 | கொண்டாவில் அப்பாக்குட்டி முத்துத்தம்பி பொன் நெளிந்த சுரை திருகில்லாத முருக்குத்தி சாடு 1 |

விற்பனவு ஈஸ்வரவருஷ ஐப்பசிமீ உக -ந் திகதிக்குச் சரியான 1937-ம்வருஷம் நவம்பர் மாசம் 6 ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,

வேந்திஸ்மேஸ்தர்.

(Mis. 150. 21 & 25-10-37.)

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residinag at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakas. Press, Vannarponnai, Jaffna on Monday, October 25st 1937.